**பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டக் கூறு – II இன் 2025**

-----------------------------------------------------------------------------------------------

பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டக் கூறு – II இன் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 யூலை 25 ஆம் திகதிய 6228 - எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 5.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்தரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. பொதுக் கல்வி முறைமையின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஆரம்ப மற்றும் இரண்டாம் தர கல்வியின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், நிகழ்ச்சித்திட்ட செயற்பாடு மற்றும் தொழில்நுட்ப உதவி எனும் பெயரிலான 02 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன.
கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 449,645 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2,900 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 15,505 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 434,140 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஆகஸ்ட் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2027 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 01/2018 ஆம் இலக்க 2019 மார்ச் 15 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 9.3 ஆவது பந்தி | நிரல் அமைச்சின் செயலாளர், திட்ட வழிகாட்டல் குழு இரண்டு மாதங்களிற்கு ஒரு முறையாவது கூடியிருப்பதை உறுதிப்படுத்த வேண்டுமாயினும் மீளாய்வாண்டில் இரண்டு வழிகாட்டல் கூட்டங்கள் மட்டுமே கூட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் திட்ட வழிகாட்டல் குழு கூட்டங்களை உரிய கால எல்லைக்குள் முறையாக நடத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 96 ஆவது பந்தி | செயற்திட்டத்தின் உள்ளக கணக்காய்வானது அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவால் மேற்கொள்ளப்படல் வேண்டுமாயினும், 2025 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வு திட்டத்திற்குள் பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் கணக்காய்விற்கான தனி அலகாக அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. மேலும், 2021 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை பொதுக்கல்வி நவீன மயப்படுத்தல் செயற்திட்டத்தின் கணக்காய்வு தொடர்பாக எந்தவொரு உள்ளக கணக்காய்வு அறிக்கையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. GEM திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனை தொடர்பான கணக்காய்வு அறிக்கையை வெளியிட நான் எதிர்பார்க்கின்றேன். | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3. பௌதீகச் செயலாற்றல்**

**3.1 தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான விடயங்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திட்டத்தின் இரண்டு ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டிகளை (DLI) ஒருங்கணைப்பதற்காக இரு நிபுணத்துவ ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டிற்கான ஆலோசனைக் கட்டணமாக ரூபா1,436,000 செலுத்தப்பட்டிருந்தது. இந்த ஆலோசகரின் அறிக்கை திட்டத்தின் ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டிகளின்(DLIs) நோக்கத்தை நிறைவேற்றுவதற்றுவதன் மூலம் பெறப்பட்ட முடிவுகளை பாடசாலை முறைமைக்கு வழங்குவதற்கான ஒரு தீர்மானம் எடுக்கும் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எனினும், அமைச்சின் கொள்கை, திட்டமிடல் மற்றும் செயலாற்றல் மீளாய்வு தொடர்பான தீர்மானங்கள் அதற்கேற்ப எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆலோசகர்களின் களப்பயணங்களின் முடிவுகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. | ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டிகளை (DLI) அடைவதற்கான முடிவெடுக்கும் கருவியாக ஆலோசகரின் அறிக்கைகள் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் பொருத்தமான திட்டங்கள், அமைச்சின் கொள்கைத் திட்டமிடல் மற்றும் செயல்திறன் மீளாய்வு பிரிவால் தயாரிக்கப்பட்டு ஆலோசகர்கள் மூலம் செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | பொது கல்வி நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், முதுகலைப் பட்டப்படிப்பை தொடர்வதற்காக 05 அதிகாரிகளுக்கு வெளிநாட்டு புலமைப்பரிசில் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சின் பெறுகைக்குழு கூட்டத்தின் தீர்மானத்தின் பந்தி 05 இன் படி முன்னர் புலமைப்பரிசில் பெற்றுக்கொள்ளாத அலுவலர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதிலும், ஏற்கனவே வேறு பல்கலைக்கழகங்களில் பட்டப்பின் படிப்பை பூர்த்தி செய்த அலுவலர்கள் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. முடிந்தவரை பொருத்தமான நியாயமான முறைமையின் அடிப்படையில் தெரிவுகளை மேற்கொள்வதற்கும், தொடர்புடைய அளவுகோள்களை முறையாக பின்பற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வெளிநாட்டு புலமைப்பரிசிலுக்கு அலுவலர்களை தெரிவு செய்யும் போது குறிப்பிட்ட அளவுகோள்கள் நிறுவப்படல் வேண்டும். மேலும் அலுவலர்கள் அவ்வாறு நிறுவப்பட்ட கோட்பாடுகளுக்கு அமைவாக உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | புலமைப்பரிசில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதன் விளைவாக, இதுவரை பட்டப்பின் படிப்பை பெறாத அலுவலர்கள் வெளிநாட்டு புலமைப்பரிசில் பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர். அத்துடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | பட்டப்பின் படிப்பை பூர்த்தி செய்த இரு விரிவுரையாளர்கள், தங்களது கட்டாய சேவைக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் சேவையை விட்டு விலகிச் சென்றுள்ளதுடன் அவ்விரு விரிவுரையாளர்களிற்கு செலவிடப்பட்ட ரூபா 17,285,346 தொகை தொடர்புடைய அலுவலரிடமிருந்தோ அல்லது பிணையாளியிடமிருந்தோ அறவிடுவதற்கு அமைச்சு தவறியுள்ளது. | அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகையை 14 நாட்களுக்குள் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட கல்வியியல் கல்லூரி பீடாதிபதிகளிற்கு அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களை வழங்குவது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அமைச்சினாலேயே மேற்கொள்ளப்படுவதனால் நிலுவைத் தொகைளை அறவிடும் செயல்முறைகளும் அமைச்சினாலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | ஒரு விரிவுரையாளர் பட்டப்பின் படிப்பை இடைநடுவில் நிறுத்தி வெளிநாடு சென்றிருந்தும் இவ்பட்டப்பின் படிப்பிற்கு செலவிடப்பட்ட ரூபா 6,073,940 தொகையினை அறவிடுவதற்கு அமைச்சு தவறியுள்ளது. | சம்பந்தப்பட்ட தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு, வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள் கிளை சம்பந்தப்பட்ட கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகளிற்கு அறிவுறுத்தியுள்ளது. | வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களை வழங்குவது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அமைச்சினாலேயே மேற்கொள்ளப்படுவதனால் நிலுவைத் தொகைளை அறவிடும் செயல்முறைகளும் அமைச்சினாலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் (PAD) 52 ஆவது பந்தியின்படி, செயற்திட்ட நிதி விடுவிப்பதற்கு முன்னர் கல்வித்துறை சார்ந்த நிபுணத்துவத்தை கொண்ட ஒரு சுயாதீன நிறுவனத்தால் பெறுபேறுகள் சரிபார்க்கபடுதல் வேண்டும். அதற்கமைவாக, திட்ட நிதியை பயன்படுத்துவதன் மூலம் தொடர்புடைய ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டிகளின் | இந்த மூன்றாம் தரப்பினரின் சரிபார்ப்பு (TPV) பணியை SLAAED அமைப்பிற்கு வழங்குமாறு உலக வங்கி வழங்கிய பரிந்துரையை தவிர உலக வங்கிக்கு வேறு எந்த பங்களிப்பும் இல்லை. எனவே, அமைச்சானது SLAAED அமைப்புடன் | தெரிவு செய்யப்பட்ட நிறுவனமானது மூன்றாம் தரப்பினரின் சரிபார்ப்பு மதிப்பீட்டிற்கான தரவுகளை தானே பெற வேண்டும் மற்றும் செலவினம் சார்நத குறிகாட்டிகளின் அடைவு மட்டங்களை சுயாதீனமான மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டும். |

அடைவு மட்டங்கள் மீதான சுயாதீனமான மதிப்பீட்டை வழங்குவது தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் பொறுப்பாக இருந்த போதிலும், இந்த சுயாதீன அறிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான தரவுகளை கல்வி அமைச்சே வழங்கியிருந்தமையால் அந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அறிக்கைகளின் துல்லியத்தன்மை கணக்காய்விற்கு நம்பகத்தன்மையாக காணப்படவில்லை.

ஒருங்கிணைந்து செயல்பட்டு, அவர்கள் ஆய்வை மேற்கொள்வதற்கு தேவையான தரவுகளை வழங்க வேண்டும்.